15-11-2026

பொதுக்காலம் 33 வாரம் ஞாயிற்றுக்கிழமை

திருப்பலி முன்னுரை

ஆண்டவர் சீயோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குவாராக! உம் வாழ் நாளெல்லாம் நீர் எருசலேமின் நல்வாழ்வைக் காணும்படி செய்வாராக!

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக்காலம் முப்பத்தி மூன்றாம் ஞாயிறு. நமக்கு ஆசி வழங்கி, நல் வாழ்வைக் காணும்படி செய்யும் நம் தந்தையாம் இறைவனின் திருப்பாதத்தில் ஒரே குடும்பமாக ஒன்று கூடியுள்ளோம். இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் கொடைகளையும், ஆற்றல்களையும் பொது நன்மைக்காக வழங்குகின்றார். ஆகவே நாம் அவற்றைச் சரியாகவும், சிறப்பாகவும் பயன்படுத்தி மனிதருக்கு ஆறுதலையும், கடவுளுக்கு மகிமையையும் கொண்டுவரவேண்டுமென்பது இன்றைய இறைவார்த்தைகள் தரும் செய்தியாகின்றது. அத்தோடு நாம் எப்பொழுதும் விவேகத்தோடும், அறிவுத் தெளிவோடும் இருந்து தீமைகளை விலக்கி எப்பொழுதும் கடவுளைச் சந்திக்கத் தயாராய் இருக்கவேண்டும் என்ற சிந்தனையும் நமக்குத் தரப்படுகின்றது. இந்தச் சிந்தனைகளை நாம் நம் மனத்தில் ஆழமாகப் பதித்து, இறைவன் விரும்பும் வாழ்வை நாம் வாழ வரம் கேட்டுச் செபிப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுகள்

01. ஆயனே எம் இறைவா!

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம் : அவர்கள் ஒவ்வொருவரும் உமக்கு அஞ்சி உமது வழிகளில் நடக்கவும், அவர்களுக்கு நீர் கொடுத்த கொடைகளையும், ஆற்றல்களையும் சிறப்பாகவும் பயன்படுத்தி மனிதருக்கு ஆறுதலையும், உமக்கு மகிமையையும் கொண்டு வரவேண்டிய மனப்பக்குவத்தை அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

02. சீயோனிலிருந்து எமக்கு ஆசி வழங்கும் தந்தையே!

உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், உமக்கு அஞ்சி உமது வழிகளில் நடக்கவும், எங்களுக்கு நீர் கொடுத்த கொடைகளையும், ஆற்றல்களையும் சிறப்பாகவும், சரியாகவும், பயன்படுத்தி மனிதருக்கு ஆறுதலையும், உமக்கு மகிமையையும் கொண்டுவர வேண்டிய ஆற்றலை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

03. எங்கள் வாழ்வின் நிறைவாகிய இறைவா!

எங்கள் குடும்பங்களிலிருந்து பிரிந்து வெளியிடங்களிலும், வெளிநாட்டிலும் வாழும் எம் சகோதரச் சகோதரிகளை உம் திருமுன் நினைவுகூர்கிறோம். அங்கு அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் உமது உடனிருப்பை உணர்ந்து நல்வாழ்வு வாழ்ந்திடவும், பாச உணர்வுகளுடன் தங்கள் குடும்பங்களோடு ஒன்றிணைந்திருக்கத் தேவையான வரங்களையும், தொற்றுநோயிலிருந்து பாதுகாப்பையும் வழங்கிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

04. ஆயத்தமாயிருக்க அழைப்பவரே இறைவா!

உலகின் முடிவிலும், எங்களது வாழ்வின் முடிவிலும் இறைமகன் இயேசுவை சந்திக்க விழிப்புடனே செயல்பட்டு இறையாட்சிக்குள் நுழையும் தகுதியைத் தருகின்ற நேரிய பாதைகளைப் பற்றிக் கொண்டு, உமது ஆற்றலையும், மாட்சியையும் கண்டு மகிழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

05. இறை நம்பிக்கையில் வாழ்ந்து மரிப்போர் இறையாட்சியில் நுழையும் தகுதி பெறுவார்கள் என்றுரைத்தவரே இறைவா!

எங்கள் குடும்பங்களிலே இறை விசுவாசத்தில் வாழ்ந்து மரித்துள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் உமது பேரிரக்கத்தால் அமைதியும், ஒளியும் கொண்ட நிலைவாழ்வை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

06. அன்பின் இறைவா,

யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் தாங்கள் செய்த பாவங்களினால் உத்தரிக்கிற ஸ்தலத்தில் இருந்தாலும் அவர்கள் வேதனை குறைந்து உம் தெய்வீக விருந்தில் பங்குபெற அவர்களை ஆசிர்வதித்து உம்மிடம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

07. நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!

தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

08. சமூகத்தில் தங்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் கொண்டு மக்களுக்குச் சேவை செய்யும் பொதுச்சேவையாளர் அனைவரும் நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் பணியாற்றத் உறுதியான மனத்தை அவர்களுக்களித்திடவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

09. வாழ்வில் நம்பிக்கையிழந்து, தங்களுக்குள்ள திறமைகளை வெளிப்படுத்தத் பயந்து அல்லது சோம்பலால் முடங்கித் தவிப்போர் அனைவரும் புதுத் தெம்பைப் பெற்று, தங்களது ஆற்றல்களை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

10. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் குறைகள், திறமைகள், ஆற்றல்களைக் கவனித்து அச்சிறார்களை அவர்களுக்கான பாதையில் நற்பண்புகளுடன் வளர்க்கவும், பிள்ளைகள் தமது திறமைகளை இனங்கண்டு, தமது எதிர்கால வாழ்வைத் தீர்மானிக்கவும் தெளிவான சிந்தனையையும், மனவுறுதியையும் அளிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.